**செ. கு. எண்**: 078 **நாள்**: 05.05.2014

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 5.5.2014

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வெள்ளித் திருப்பூர் பிரிவு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மஸ்தூர் பணியாளர் திரு. பச்சியப்பன் என்பவர் 28.2.2014 அன்று மாத்தூர் புளியங்காடு அருகே மின்கம்பத்தில் பணி செய்த போது மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், வெட்டியாந்தொழுவம் பிரிவு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் வணிக ஆய்வாளர் திரு. அன்பரசன் என்பவர் 15.3.2014 அன்று வெட்டியாந்தொழுவம் துணை மின் நிலையத்தில் பணியிலிருந்த போது மின்மாற்றி வெடித்ததில் காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பிரிவு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கள உதவியாளர் திரு. முருகன் என்பவர் 22.3.2014 அன்று அவலூர்பேட்டை மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியை மேற்கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மோர்தானா கிராம பஞ்சாயத்து பம்ப் ஆப்ரேட்டர் திரு. வரதகவுண்டர் என்பவரின் மகன் ஆறுமுகம் என்பவர் 31.3.2014 அன்று பணியிலிருந்த போது போர்வெல் இரும்பு பைப், மின் கம்பியில் உரசியதில் மின்சாரம் தாக்கி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மண்டலம், கோயம்பேடு-1 பணிமனை அரசுப் பேருந்து ஓட்டுநர் திரு. செந்தில்குமார் என்பவர் 8.4.2014 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மல்லூர் பகுதியில் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தைச் சேர்ந்த (TASMAC) கடையில் விற்பனையாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.குமார் என்பவர் 5.4.2014 அன்று பணி முடித்து சீரகாபாடி கிராமம் அருகே சென்று கொண்டிருந்த போது அடையாளம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டதில், அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 6.4.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வனக்கோட்டம், வனப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வனக் காவலர் திரு.பி. கோவிந்தசாமி 6.3.2014 அன்று உளுந்தூர்பேட்டை வட்ட வனச்சரகப் பகுதி எடைக்கல் காப்புக் காடு அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது, அவ்வழியே வந்த ஒரு வாகனத்தில் இருந்தவர்கள் தாக்கி விட்டு தப்பியோடிய போது, அவர்களைத் துரத்திப் பிடிக்க முயன்ற நிகழ்வில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 22.3.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மஸ்தூர் பணியாளர் பச்சியப்பன்; வணிக ஆய்வாளர் அன்பரசன், கள உதவியாளர் முருகன்; பஞ்சாயத்து பம்ப் ஆப்ரேட்டர் ஆறுமுகம்; அரசுப் பேருந்து ஓட்டுநர் செந்தில்குமார்; தமிழ்நாடு மாநில வாணிபக் கழக விற்பனையாளர் குமார் மற்றும் வனக் காவலர் கோவிந்தசாமி; ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**